**சுருக்கம்**

சிறுபான்மையினர் நலன் – மதச்சார்பு சிறுபான்மையினர் அந்தஸ்து (Religious Minority Status) கோரும் கல்வி நிறுவனங்களின் அறங்காவலர்கள் (Trustees) சிறுபான்மையினர் என்பதற்கான சான்றிதழை வருவாய் கோட்டாட்சியரிடம் (Revenue Divisional Officer) பெற்று இணையவழியில் விண்ணப்பிக்க கோருதல் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்**
**சிறுபான்மையினர் நல(சிந1)த்துறை**

அரசாணை (நிலை) எண்.49 நாள் 22.06.2024

திருவள்ளுவர் ஆண்டு 2055
குரோதி – ஆனி – 08

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.109, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(சிந1)த்துறை, நாள் 29.12.2022.
2. அரசாணை (நிலை) எண்.17, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(சிந1)த்துறை, நாள் 02.02.2024.
3. சிறுபான்மையினர் நல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.பி4/ 188/2024, நாள் 02.05.2024.

*******

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் சிறுபான்மையின கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையினர் அந்தஸ்து வழங்கும் பொருண்மைக்கான வழிமுறைகள் உருவாக்கப்பட்டு இத்துறை மூலம் செயல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கல்வி நிறுவனங்களுக்கு மதச்சார்பு சிறுபான்மையினர் அந்தஸ்து சான்றிதழ் (Religious Minority status) நிரந்தரமாக வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், சிறுபான்மையினர் நல இயக்குநர், கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையினர் அந்தஸ்து கோரி இணையவழியில் விண்ணப்பிக்க ஏதுவாக இணையதளம் உருவாக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளதாகவும், கல்வி நிறுவனங்கள் சிறுபான்மையினர் அந்தஸ்து வழங்க கோரி சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களில் கல்வி நிறுவனங்களின் அறங்காவலர்கள் (Trustees) சிறுபான்மையினர் என்பதற்கான சான்றிதழ்களை பல்வேறு அமைப்புகளில் இருந்து பெற்று அளிப்பதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களை நிர்வகிக்கும் (Trust / society) அறக்கட்டளை அறங்காவலர்கள் அல்லது நிர்வாக அமைப்பின் உறுப்பினர்கள் அனைவரும் சம்பந்தப்பட்ட சிறுபான்மையினத்தைச் சார்ந்தவர்களாக மட்டுமே இருக்க வேண்டும் என்பதாலும், அதிகாரம் பெற்ற குழுவின் (Empowered Committee) ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தியவாறும் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு மதச்சார்பு சிறுபான்மையினர் அந்தஸ்து சான்றிதழ் நிரந்தரமாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ள நிலையில், சிறுபான்மையினர் அந்தஸ்து கோரும் கல்வி நிறுவனங்களின் அறங்காவலர்கள் (Trustees) சிறுபான்மையினர் என்ற சான்றிதழை வருவாய் கோட்டாட்சியரிடம் (Revenue Divisional Officer) பெற்று தொடர்புடைய கல்வி நிறுவனங்கள் சிறுபான்மையினர் அந்தஸ்து கோரி இணையவழியில் விண்ணப்பித்திட ஏதுவாக ஆணை பிறப்பிக்குமாறு சிறுபான்மையினர் நல இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்காணும் சிறுபான்மையினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு கவனமுடன் பரிசீலனை செய்து, சிறுபான்மையினர் அந்தஸ்து கோரும் கல்வி நிறுவனங்களின் அறங்காவலர்கள் (Trustees) அளிக்கும் "சிறுபான்மையினர்" என்ற சான்று ஒரே சீராக இருப்பதை உறுதி செய்யும் வகையில், அச்சான்றிதழை வருவாய் கோட்டாட்சியரிடம் (Revenue Divisional Officer) பெற்று அக்கல்வி நிறுவனங்கள் சிறுபான்மையினர் அந்தஸ்து கோரும் விண்ணப்பத்துடன் இணைத்து இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும் என்று இதன் மூலம் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சா. விஜயராஜ் குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்

அனைத்து மாவட்ட வருவாய் கோட்டாட்சியர்,
அரசு தலைமைச் செயலாளர், சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளர்,
உயர்கல்வித்துறை, சென்னை-9.
அரசு செயலாளர்,
பள்ளிக் கல்வித்துறை, சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறை, சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும்
மீனவர் நலத்துறை, சென்னை-9.
அரசு செயலாளர்,
சட்டத்துறை, சென்னை-9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்,
வேளாண்மை - உழவர் நலத்துறை, சென்னை-9.
இயக்குநர்,
சிறுபான்மையினர் நலன், சென்னை-5.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம்,
சென்னை-9.
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் முதுநிலை முதன்மை
தனிச் செயலர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உபரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
22/06/24